# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் Tamil | Three Hours / Gr -12 (2023) | 72 | T | I,II |

❖ **பகுதி I இல் மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ள இரு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி I

**01. அ) பின்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

வாரலெஞ்சேரி தாரனின் றாரே
அலரா கின்றாற் பெரும் காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்து கோட்டி யானைச் சேந்தன் றந்தை
அரியலம்புக வினந் தோட்டு வேட்டை
நிரைய வொள் வாளிளையைர் பெருமகன்
அழிசி யார்க்கா டன்னவிவள்
பழிதீர் மாணலந் தொலைவன கண்டே

1) இச் செய்யுளின் பொருளை உமது மொழிநடையில் எழுதுக.
2) இச்செய்யுளில் வெளிப்படும் சங்க அகத்திணைப் பண்புகளை இனங்காண்க.
3) இச்செய்யுளில் கையாளப்பட்டுள்ள உவமையணியின் பொருத்தப்பாட்டை விளக்குக.

(6+5+4=15 புள்ளிகள்)

ஆ) எலியெலாம் இப்படை அரவம் யானென
ஒலியுலாம் சேனையை உவந்து கூவினான்
வலியுலாம் உலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலாம் ஒரு வழிப்புகுந்தது போலவே

1) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தை விளக்குக.
2) இச்செய்யுளில் காணப்படும் அணிகளை எடுத்துக் காட்டி விளக்குக.
3) "குகன் சிறந்த தலைமைத்துவப் பண்புடையவன்" என்பதற்கு இச்செய்யுளிலிருந்து ஆதாரங்களை முன்வைக்குக.

(4+6+5=15 புள்ளிகள்)



kalvi.lk

**02. மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1) உயிர் மெய் நெட்டெழுத்துக்களின் எண்ணிக்கை.
1) 132 2) 90 3) 126 4) 216 5) 247 ( )

2) பின்வருவனவற்றுள் உடனிலை மெய்ம்மயக்கம் இடம் பெற்றுள்ள சொல்
1) வெட்கம் 2) பந்து 3) நட்பு 4) கத்தி 5) சொற்கள் ( )

3) சந்தியக்கரமாக அமையும் எழுத்துக்கள்
1) ஐ, ஔ 2) ஒ, ஓ 3) ஐ,இ 4) ஔ, உ 5) அ,இ ( )

4) பின்வருவனவற்றுள் வேற்றுமை உருபு ஏற்கும் போது வடிவம் திரிபடையும் சொல்
1) அவன் 2) நீ 3) மனிதன் 4) அவர்கள் 5) மண் ( )

5) கீழ்வருவனவற்றில் ஒற்றளபெடைக்கு உதாரணமாக அமைவது.
1) கடாஅ 2) எழுஉதல் 3) இலங்ங்கு 4) தெண்ணீர் 5) கொய்பூ ( )

6) சொல்லின் முதலில் வரத்தக்க வினா எழுத்துக்களாக அமையும் எழுத்துத்தொகுதி
1) எ,யா,ஏ 2) எ,ஓ,ஆ 3) எ,யா,ஆ 4) யா,எ,ஓ 5) யா,ஏ,ஆ ( )

7) உயிர்த் தொடர்க் குற்றியலுகரமாக அமைவது
1) சார்பு 2) பயறு 3) கொய்து 4) வண்டு 5) நாடு ( )

8) நன்னூலார் குறிப்பிடும் சார்பெழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை
1) 245 2) 249 3) 369 4) 133 5) 126 ( )

9) வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக மட்டும் வரத்தக்க எழுத்துக்கள்.
1) க்,ச் 2) ய்,வ் 3) ய்,ர் 4) ர்,ழ் 5) ப்,வ் ( )

10) பின்வருவனவற்றுள் செயற்படுபொருள் குன்றாத வினையாக அமைவது.
1) அவள் வேகமாக ஓடினாள்
2) விமல் விரைந்து வந்தான்
3) தம்பி கவனமாகப் படித்தான்
4) சிறுமி பலமாகச் சிரித்தாள்
5) சாந்தா மெதுவாக நடந்தாள் ( )

(10 x 1 = 10 புள்ளிகள்)

**03. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.**

1) பொருளாதார மாற்றங்களும் சவால்மிகு மனித வாழ்க்கையும்.
2) மதங்கள் போதிக்கும் விழுமியப் பண்புகள்
3) மொழி வளர்ச்சியில் ஊடகங்களின் வகிபங்கு
4) தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெண்கள்
5) ‘‘தோல்வியிற் கலங்கேல்’’

(20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

04. திருவள்ளுவர் 'குற்றங்கடித்தல்' என்ற அதிகாரத்தில் கூறுவனவற்றை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவு படுத்துக.

அ) குற்றங்களாகக் கருதப்படுபவை

ஆ) குற்றங் கடியும் வழிகள்

இ) உலோபத் தன்மையின் இழிவு

ஈ) உயர்நிலை அடைவதற்கான உபாயங்கள் (4 + 8 + 4 + 4 = 20 புள்ளிகள்)

05. அ) இயற்கை நெறிக் காலத்தில் தோற்றம்பெற்ற இலக்கியங்களைப் பொருளடிப்படையில் பாகுபடுத்துக.

ஆ) "நெடுநல்வாடை அகமா, புறமா எனும் சர்ச்சைக்குரிய இலக்கியம்" ஆராய்க.

இ) இயற்கைநெறிக்கால இலக்கியங்களது செய்யுள் மரபு தொடர்பான பண்புகளைக் குறிப்பிடுக.

(9 + 6 + 5 = 20 புள்ளிகள்)

06. கம்பராமாயணம் கங்கை காண்படலம் 1 – 13 பாடல்களை ஆதாரமாகக் கொண்டு விடையளிக்குக.

அ) கங்கைக் கரையை அடைந்த பரதனது படைச் சிறப்பு.

ஆ) பரதனது படைகண்டு குகன் அடைந்தசீற்றம்

இ) அணிக் கையாட்சிகள். (7 + 7 + 6 = 20 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) தியாகம் எனும் சிறுகதையில் கதிரேசன் செட்டியாரின் பாத்திர வார்ப்பும், பண்புகளும்.

ஆ) தமிழ்த்தொண்டு எனும் கட்டுரையில் உத்தமகவிகள் பற்றிய விபுலானந்த அடிகளின் பார்வை.

இ) பாரதியாரின் குயில்பாட்டில் காணப்படும் இலக்கியச் சிறப்புக்கள்.

ஈ) "நகுதக் கனரே நாடு மீக் கூறுநர்" எனும் புறநானூற்றுப் பாடலினூடாகப் புலவர் வெளிப்படுத்த விளைந்த விடயம்.

(2 x 10 = 20 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page